இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை-42
அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. G. உதயகுமார், B.E.,

செ.மு.ஆ.எண்.அ2/ 966 /2017 -11 நாள் : 12.6.2017

பொருள் : பணியமைப்பு - மோட்டார் வாகன பராமரிப்புத் துறை - அரசு தானியங்கி பணிமனை கடலூர் - திருமதி. S. மோகனா, தட்டச்சர் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நேரடி நியமனம் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்துறையில் தட்டச்சராக தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டார் - தட்டச்சர் பதவியில் அன்னாரது பணிக்காலத்தை முறைப்படுத்தி ஆணைகள் வழங்கல்.

பார்வை : 1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண். 994/ PSD-A / 2016, dated 3.2.2016
2. இயக்குநரது செ. மு. ஆணை எண். அ2/ 1177/ 2016 -11 நாள் 18.2.2016.

------

பார்வை 1ல் காணும் கடிதம் வாயிலாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி S. மோகனா, பார்வை 2ல் காணும் இயக்குநரது செயல்முறை ஆணைகள் வாயிலாக மோட்டார் வாகன பராமரிப்புத் துறையின் கடலூர், அரசு தானியங்கி பணிமனையில் தற்காலிகமாக தட்டச்சராக பணியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அன்னார் 26.2.2016 முற்பகல் தட்டச்சராக பணியில் சேர்ந்தார்.

திருமதி. S. மோகனா, என்பவர் தட்டச்சர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றிருக்கிறார். எனவே, அன்னாரது பணிக்காலம் தட்டச்சர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 26.2.2016 முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டு ஆண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேலும் பார்வை 1ல் காணும் அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்தவாறு "இந்த பணிவரன்முறை ஆணைகள் 2013-2014 முதல் 2014-2015 வரையிலான குரூப்-IV தெரிவுகள் தொடர்பாக சென்னை / மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் (WPs) தீர்ப்புக்கு உட்பட்டதாகும்" எனத் தெரிவிக்கப்படுகிறது.

("The above regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services 2013-2014 to 2014-2015 recruitment.")

(ஒம்/-)G. உதயகுமார்
இயக்குநர்

பெறுநர் :
திருமதி. S. மோகனா, தட்டச்சர், அரசு தானியங்கி பணிமனை, கடலூர். (உரிய வழிமுறையாக)

நகல்:
தானியங்கி பொறியாளர், அ.தா.ப. கடலூர்
(அன்னாரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு தானியங்கி பொறியாளர், கேட்டுக்கொள்ளப்படுகிறார்)
மண்டல துணை இயக்குநர், திருச்சி
அ2 இ.கோப்பு

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

12/6/17
துணை இயக்குநர்(நிர்வாகம்)(பொ)

12/6/17

Scanned with OKEN Scanner